TNPSCJOB

# லொயோலா ஈஸி கணிதம்

# 6

## பருவம் - I, II & III

அரசு புதிய பாடத்திட்டத்தின் படி
விடைக்குறிப்பு (Key) அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்

லொயோலா பப்ளிகேஷன்ஸ்
விவேக் இல்லம்
19, ராஜ் நகர், N.G.O. 'A' காலனி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 7.
போன் : 0462 - 2553186
செல் : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹.195/-

**Less Strain Score More**

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB

## நூலாக்கம்

**Copy right : © LOYOLA PUBLICATION**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

## நூலினுள் புகுமுன்.....

1. 6ம் வகுப்பு கணிதம் மாணவ / மாணவியர் எளிதில் புரியும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது.
2. ஒவ்வொரு தலைப்புகளில் உள்ள கணக்குகள் அனைத்தும் எளிய முறையில் செய்து காட்டப்பட்டுள்ளது.
3. தேவைக்கேற்ப கூடுதல் வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
4. 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை அனைத்து நூல்களும் அரசுத் தேர்வை நோக்கியே எழுதப்பட்டுள்ளது.

**குறிப்பு :** **Loyola Ec** புத்தகங்களை 10, 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவ மாணவிகள் வாங்கிப் பயின்றால், அரசுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று உச்சத்தைத் தொடலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**அன்புடன்**

**லொயோலா பப்ளிகேஷன்**

**ஆசிரியர்**

**Mr. Orlinson M.Sc., M.Phil., B.Ed.,**

**St. Xavier's Hr. Sec. School, Palayam Kottai**

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்த QR Code ஸ்கேன் செய்து உங்களது தொலைபேசி எண்ணை பதிவு செய்து கொள்ளவும். இதன் மூலம் பாடம் சம்பந்தப்பட்ட குறுஞ்செய்திகள், whatsapp மற்றும் SMS மூலமாக அனுப்பப்படும். இதனைப் பயன்படுத்திக் கொள்ளவும்.

TNPSCJOB | www.tnpscjob.com

# லொயோலா பப்ளிக்கேஷனின் – நோக்கம்

**நோக்கம் :**

படிப்பில் பின்தங்கிய மாணவர்கள் / மாணவிகளை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருதல் (6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை).

**நோக்கத்தை அடைய யுக்திகள் :**

1. மாணவ / மாணவிகளின் உளவியல் அடிப்படையில் எளிதில் புரிய வைத்தல்.
2. மாணவ / மாணவிகள் அச்சமின்றி அரசுத் தேர்வுகளை எதிர் கொள்ள உதவுதல்.
3. அரசுத் தேர்வுகளில் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் விடைக்குறிப்பு (Key) அடிப்படையில் தயாரிப்பு.
4. ஒவ்வொரு கேள்விக்குரிய பதில்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும் இருத்தல்.
5. மெல்லக்கற்கும் மாணவ / மாணவிகளுக்கு மேலும் எளிமைப்படுத்திக் கொடுத்தல்.
   (தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வியில்
   10ஆம் வகுப்பு – தமிழ், ஆங்கிலம், அறிவியல், சமூகஅறிவியல்)
   11ஆம் வகுப்பு – தமிழ் மற்றும் ஆங்கிலம்
   12ஆம் வகுப்பு – தமிழ் மற்றும் ஆங்கிலம்

**சிறப்புகள் :**

1. அரசுத் தேர்வில் கேட்கப்படும் புத்தக வினாக்களைத் தவிர கூடுதல் வினாக்கள் நமது பதிப்புகளில் இடம் பெற்றுள்ளன.
2. லொயோலா ஈசி நூல்களை வாங்கிப் பயன்படுத்தும் மாணவ / மாணவிகள் ...
   - ❖ அரசுத் தேர்வில் தேர்ச்சியடையவே முடியாது என்ற நிலையில் உள்ளவர்கள் மிக எளிதில் 35% மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறலாம்.
   - ❖ 35% - 40% மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவிகள் 75% - 80% மதிப்பெண்கள் வரை பெறலாம்.
   - ❖ 80% மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவிகள் 95% - 99% மதிப்பெண்கள் வரை பெறலாம்.
   - ❖ 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுத்தேர்வுகளில் கேட்கப்படும் வினாத்தாள்களில் 98% வினாக்களும் மற்றும் பல ஆண்டுகளில் 100% வினாக்களும் இடம்பெற்று வருகின்றன என்பது லொயோலா பதிப்புகளின் சிறப்பு.

**வழிகாட்டுதல் :**

உயர் படிப்பிற்கு மாணவ / மாணவிகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வழிகாட்டும் நோக்கில் 10, 12ஆம் வகுப்பு தேர்ச்சிக்குப் பின் என்ன படிக்கலாம்? என்பதைப் பற்றிய ஆலோசனைகள் இடம் பெற்றுள்ளன.

TNPSCJOB

# பொருளடக்கம்


## பருவம் - 1

| இயல் | பாடத் தலைப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | எண்கள் | 5 |
| 2 | இயற்கணிதம்-ஓர் அறிமுகம் | 14 |
| 3 | விகிதம் மற்றும் விகித சமம் | 19 |
| 4 | வடிவியல் | 28 |
| 5 | புள்ளியியல் | 39 |
| 6 | தகவல் செயலாக்கம் | 53 |

## பருவம் - 2

| இயல் | பாடத் தலைப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | எண்கள் | 58 |
| 2 | அளவைகள் | 67 |
| 3 | பட்டியல், இலாபம் மற்றும் நட்டம் | 77 |
| 4 | வடிவியல் | 84 |
| 5 | தகவல் செயலாக்கம் | 92 |

## பருவம் - 3

| இயல் | பாடத் தலைப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பின்னங்கள் | 96 |
| 2 | முழுக்கள் | 103 |
| 3 | சுற்றளவு மற்றும் பரப்பளவு | 109 |
| 4 | சமச்சீர்த்தன்மை | 118 |
| 5 | தகவல் செயலாக்கம் | 123 |


TNPSCJOB | www.tnpscjob.com

# இயல் 1 எண்கள்

**நினைவில் கொள்க**

- ➢ பெரிய எண்களைப் படிக்கவும், எழுதவும் காற்புள்ளி பயன்படுகிறது.
- ➢ இந்திய மற்றும் பன்னாட்டு முறையில் காற்புள்ளியின் பயன்பாடு வேறுபடுகிறது.

## பயிற்சி 1.1

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

i) மிகச் சிறிய ஏழிலக்க எண் ________.

**விடை: 1000000**

ii) மிகப் பெரிய எட்டு இலக்க எண் ________.

**விடை: 99999999**

iii) 7005380 என்ற எண்ணில் 5 இன் இடமதிப்பு ________. **விடை: ஐந்து ஆயிரம்**

iv) 76,70,905 என்ற எண்ணின் விரிவாக்கம் ________.

**விடை: 7000000 + 600000 + 70000 + 900 + 5**

**2. சரியா, தவறா எனக் கூறுக.**

i) ஓரிலக்க எண்ணின் தொடரி எப்போதும் ஓரிலக்க எண்ணாகும். **விடை: தவறு**

ii) மூவிலக்க எண்ணின் முன்னி எப்போதும் மூன்று அல்லது நான்கு இலக்க எண்ணாகும்

**விடை: தவறு**

iii) இந்திய முறையில் 67999037 என்ற எண்ணை 6,79,99,037 என எழுதுகிறோம். **விடை: சரி**

iv) 88,888 = 8×10000+8x100 + 8 x 10 + 8 x 1

**விடை: தவறு**

**3. மிகச் சிறிய ஆறிலக்க எண்களில் எத்தனை பத்தாயிரங்கள் உள்ளன?**

**விடை: மிகச் சிறிய ஆறிலக்க எண்= 1,00,000**

$\frac{1,0\cancel{0},\cancel{000}}{1\cancel{0},\cancel{000}} = 10$ ஒரு லட்சம் = 10 பத்தாயிரம்

**4. காற்புள்ளியை உற்று நோக்கி பின்வரும் எண்களில்7 இன் இட மதிப்பை எழுதுக**

i) 56,74,56,345 ii) 567,456,345

**விடை: i) 70,00,000 ii) 7,000,000**

**5. காற்புள்ளியைப் பயன்படுத்திப் பின்வரும் எண்களைப் பன்னாட்டு முறையில் எழுதுக.**

i) 347056 ii) 7345671
iii) 634567105 iv) 1234567890

**விடை: i) 347,056 ii) 7,345,671 iii) 634,567,105 iv) 1,234,567,890**

**6. மிகப் பெரிய ஆறிலக்க எண்ணை எழுதி, அதை இந்திய மற்றும் பன்னாட்டு முறைகளில் காற்புள்ளி இடுக.**

**விடை:** மிகப்பெரிய ஆறிலக்க எண் - 9,99,999

இந்திய முறை: 9,99,999 (ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பது ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது)

பன்னாட்டு முறை: 999,999 (தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது)

**7. பின்வரும் எண்ணுருக்களின் எண் பெயர்களை இந்திய முறையில் எழுதுக.**

i) 75,32,105 ii) 9,75,63,453

**விடை:** i) **எழுபத்து ஐந்து இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து நூற்று ஐந்து**

ii) **ஒன்பது கோடி எழுபத்து ஐந்து இலட்சத்து அறுபத்து மூன்று ஆயிரத்து நானூற்று ஐம்பத்து மூன்று.**

**8. பின்வரும் எண்ணுருக்களின் எண் பெயர்களை பன்னாட்டு முறையில் எழுதுக.**

i) 345,678 ii) 8,343,710
iii) 103,456,789

**விடை:**

i) **முந்நூற்று நாற்பத்து ஐந்தாயிரத்து அறுநூற்று எழுபத்து எட்டு**

ii) **எட்டு மில்லியன் முந்நூற்று நாற்பத்து மூன்று ஆயிரத்து எழுநூற்று பத்து**

TNPSCJOB



iii) **நூற்று மூன்று மில்லியன் நானூற்று ஐம்பத்து ஆறு ஆயிரத்து எழுநூற்று எண்பத்து ஒன்பது**

**9. எண் பெயர்களை எண்ணுருக்களால் எழுதுக**

i) இரண்டு கோடியே முப்பது இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து தொள்ளாயிரத்து எண்பது

ii) அறுபத்து ஆறு மில்லியன் முந்நூற்று நாற்பத்தைந்து ஆயிரத்து இருபத்து ஏழு

iii) எழுநூற்று எண்பத்து ஒன்பது மில்லியன் இரு நூற்று பதிமூன்றாயிரத்து நானூற்று ஐம்பத்து ஆறு

**விடை: i) 2,30,51,980 ii) 66,345,027 iii) 789,213,456**

**10. தமிழ்நாட்டில், இருபத்து ஆறாயிரத்து முந்நூற்று நாற்பத்து ஐந்து சதுர கிலோமீட்டர் பரப்பளவு காடுகள் உள்ளன என்பதை இந்திய எண் முறையில் எழுதுக.**

**விடை: 26,345**

**11. இந்தியத் தொடர்வண்டிப் போக்குவரத்தில் ஏறத்தாழப் பத்து இலட்சம் ஊழியர்கள் உள்ளனர். இதைப் பன்னாட்டு எண் முறையில் எழுதுக.**

**விடை: 1,000,000 (ஒரு மில்லியன்)**

## புறவய வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**12. 10 மில்லியனின் தொடரி**

அ) 1000001 ஆ) 10000001
இ) 9999999 ஈ) 100001

**விடை: அ) 10000001**

**13. 99999இன் தொடரி மற்றும் முன்னியின் வேறுபாடு**

ஆ) 90000 அ) 1
இ) 2 ஈ) 99001 **விடை: இ) 2**

**14. 1 பில்லியனுக்குச் சமமானது**

அ) 100 கோடி ஆ) 100 மில்லியன்
இ) 100 இலட்சம் ஈ) 10,000 இலட்சம்

**விடை: அ) 100 கோடி**

**15. 6,70,905 என்ற எண்ணின் விரிவான வடிவம்**

அ) $6 \times 10000 + 7 \times 1000 + 9\times100 + 5 \times 1$

ஆ) $6 \times 10000 + 7 \times 1000 + 0 \times 100 + 9 \times 100 + 0 \times 10 + 5 \times 1$

இ) $6 \times 1000000 + 7 \times 10000 + 0 \times 1000 + 9 \times 100 + 0 \times 10 + 5 \times 1$

ஈ) $6 \times 100000 + 7 \times 10000 + 0 \times 1000 + 9 \times 100 + 0 \times 10 + 5 \times 1$

**விடை: ஈ) $6 \times 100000 + 7 \times 10000 + 0 \times 1000 + 9 \times 100 + 0 \times 10 + 5 \times 1$**

## நினைவில் கொள்க

➢ இரண்டு எண்களை ஒப்பிடும் போது, அதிக இலக்கங்களைக் கொண்ட எண் பெரிய எண்ணாகும்.

➢ இரண்டு எண்களை ஒப்பிடும் போது, சம எண்ணிக்கையில் இலக்கங்களைப் பெற்றிருந்தால், இடப்புறம் பெரிய இலக்கத்தைக் கொண்ட எண் பெரிய எண்ணாகும்.

## பயிற்சி 1.2

**1. கோடிட்ட இடங்களில் ">" அல்லது "<" அல்லது "=." குறியீடுகளைக் கொண்டு நிரப்புக.**

i) 48792 _______ 48972 **விடை: <**

ii) 1248654 _______ 1246854 **விடை: >**

iii) 658794 _______ 658794 **விடை: =**

**2. சரியா, தவறா எனக் கூறுக.**

i) மிகச் சிறிய ஏழு இலக்க எண்ணிற்கும் மிகப் பெரிய ஆறு இலக்க எண்ணிற்கும் இடையே உள்ள வேறுபாடு 10 ஆகும். **விடை: தவறு**

ii) 8, 6, 0, 9 என்ற எண்களை ஒரே ஒரு முறை மட்டும் பயன்படுத்திக் கிடைக்கப்பெறும் மிகப் பெரிய 4 இலக்க எண் 9086 ஆகும். **விடை: தவறு**

iii) நான்கு இலக்க எண்களின் மொத்த எண்ணிக்கை 9000. **விடை: சரி**

**3. 1386787215, 137698890, 86720560 என்ற எண்களில் எந்த எண் மிகப் பெரியது? எந்த எண் மிகச் சிறியது?**

**விடை: மிகப்பெரிய எண் = 1386787215**
**மிகச்சிறிய எண் = 86720560**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**4. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை இறங்கு வரிசையில் எழுதுக.**

128435, 10835, 21354, 6348, 25840

**விடை:**

**128435 > 25840 > 21354 > 10835 > 6348**

**5. பத்து லட்சம் இடத்தில் 6 என்ற எண்ணும் பத்தாயிரம் இடத்தில் 9 என்ற எண்ணும் உள்ளவாறு ஏதேனும் ஓர் எட்டு இலக்க எண்ணை எழுதுக.**

**விடை:** 76594231, 86493725

**6. இராஜன் 4,7 மற்றும் 9 என்ற இலக்கங்களைப் பயன்படுத்தி 3 இலக்க எண்களை எழுதுகிறான். எத்தனை எண்களை அவனால் எழுத முடியும்?**

**விடை:** 974, 947, 479, 497, 749, 794

**7. என்னுடைய பணம் பெறும் அட்டையின் (ATM அட்டை) கடவுச் சொல் 9, 4, 6 மற்றும் 8 ஆகிய இலக்கங்களைக் கொண்டது. இது மிகச் சிறிய 4 இலக்க இரட்டை எண் ஆகும். எனது பணம் பெறும் அட்டையின் (ATM அட்டை) கடவுச் சொல் காண்க.**

**விடை:** 4698

**8. அஞ்சலகக் குறியீட்டு எண் 6 இலக்கங்களைக் கொண்டது. இதன் முதல் 3 இலக்க எண்கள் 6, 3 மற்றும் 1, ஆகும். மேலும் 0, 3 மற்றும் 6 என்ற மூன்று இலக்கங்களை ஒரு முறை மட்டுமே பயன்படுத்தி மிகப் பெரிய மற்றும் மிகச் சிறிய அஞ்சலகக் குறியீட்டு எண்களை அமைக்க.**

**விடை: மிகப்பெரிய அஞ்சலகக் குறியீட்டு எண் - 631630 மிகச்சிறிய அஞ்சலகக் குறியீட்டு எண் - 631036**

**9. தமிழ்நாட்டிலுள்ள மலைகளின் உயரங்கள் (மீட்டரில்) கீழேக் கொடுக்கப்பட்டுள்ளன.**

| வ.எண் | மலைகள் | உயரம்(மீட்டர்) |
|---|---|---|
| 1. | தொட்ட பெட்டா | 2637 |
| 2. | மகேந்திர கிரி | 1647 |
| 3. | ஆனைமுடி | 2695 |
| 4. | வெள்ளியங்கிரி | 1778 |

i) மேற்கண்ட மலைகளில் உயரமான மலை எது?

ii) உயரத்தைக் கொண்டு மலைகளின் பெயர்களை மிகப் பெரியதிலிருந்து சிறியது வரை வரிசைப் படுத்தி எழுதவும்.

iii) ஆனைமுடி மற்றும் மகேந்திரகிரி ஆகிய மலைகளின் உயரங்களின் வேறுபாடு என்ன?

**விடை:**

**(i) ஆனைமுடி**

**(ii) ஆனைமுடி, தொட்ட பெட்டா, வெள்ளியங்கிரி, மகேந்திர கிரி**

**(iii) 1048 மீ**

## புறவய வினாக்கள்

**10. பட்டியலில் எந்த எண் வரிசை சிறியதிலிருந்து பெரியதாக வரிசைப்படுத்தப்பட்டு உள்ளது?**

அ) 1468, 1486, 1484

ஆ) 2345, 2435, 2235

இ) 134205, 134208, 154203

ஈ) 383553, 383548, 383642

**விடை: இ) 134205, 134208, 154203**

**11. அரபிக் கடலின் பரப்பளவு 1491000 சதுர மைல்கள் இது எந்த இரு எண்களுக்கு இடையில் அமைந்துள்ளது?**

அ) 1489000 மற்றும் 1492540

ஆ) 1489000 மற்றும் 1490540

இ) 1490000 மற்றும் 1490100

ஈ) 1480000 மற்றும் 1490000

**விடை: அ) 1489000 மற்றும் 1492540**

**12. இந்திய நாளிதழ் படிப்பவர்கள் கணக்கீட்டின் படி, 2018 இல் விற்ற நாளிதழ்களின் எண்ணிக்கையைக் காட்டும் அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அட்டவணையில் விடுபட்ட எண் என்னவாக இருக்கும்?**

| நாளிதழின் பெயர் | தரம் | விற்பனை (இலட்சத்தில்) |
|---|---|---|
| A | 1 | 70 |
| B | 2 | 50 |
| C | 3 | ? |
| D | 4 | 10 |

அ) 8 ஆ) 52 இ) 77 ஈ) 26

**விடை: ஈ) 26**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## நினைவில் கொள்க

- ➢ எண் கணிதக் கணக்கீடுகளைச் சரியாகச் செய்ய BIDMAS பயன்படுகிறது.
- ➢ அன்றாட வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகளில் பெரிய எண்கள் தேவைப்படுகின்றன.

## பயிற்சி 1.3

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

i) அருள்மொழி ஒரு நாளில் ₹ 12 சேமித்தால் 30 நாட்களில் ₹ ________ சேமிப்பாள். **விடை: ₹ 360**

ii) A என்பவர் 12 நாட்களில் ₹ 1800 வருமானம் பெறுகிறார் எனில், ஒரு நாளில் ₹ ________ ஐப் பெறுவார். **விடை: ₹ 150**

iii) $45 \div (7 + 8) - 2 =$ ________. **விடை: 1**

**2. சரியா, தவறா எனக் கூறுக.**

i) $3 + 9 \times 8 = 96$ **விடை: தவறு**

ii) $7 \times 20 - 4 = 136$ **விடை: சரி**

iii) $40 + (56 - 6) \div 2 = 45$ **விடை: தவறு**

**3. கடந்த ஐந்து மாதங்களில் ஒரு குறிப்பிட்ட பொது நூலகத்திற்கு வருகை புரிந்தவர்களின் எண்ணிக்கை முறையே 1200, 2000, 2450, 3060 மற்றும் 3200. ஐந்து மாதங்களில் அந்த நூலகத்திற்கு வருகை புரிந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்?**

**விடை: 5 மாதங்களில் நூலகத்திற்கு வருகை புரிந்தவர்களின் எண்ணிக்கை**

$= 1200 + 2000 + 2450 + 3060 + 3200$

$= 11910$

**4. சேரன் வங்கியில் சேமிப்பாக ₹ 7,50,250 ஐ வைத்திருந்தார். கல்விச் செலவிற்காக ₹ 5,34,500 ஐத் திரும்ப எடுத்தார். அவரின் கணக்கிலுள்ள மீதித் தொகையைக் காண்க?**

**விடை: சேமிப்பு = ரூ. 7,50,250**

**திரும்ப எடுத்தது = ரூ. 5,34,500**

**மீதித் தொகை = ரூ. 7,50,250**

**- ரூ. 5,34,500**

**= ரூ. 2,15,750**

**5. ஒரு மிதிவண்டித் தொழிற்சாலையில், ஒரு நாளைக்கு 1560 மிதிவண்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன எனில், 25 நாள்களில் எத்தனை மிதி வண்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன.**

**விடை: ஒரு நாளில் உற்பத்தி செய்யப்பட்ட மிதிவண்டிகள் = 1560**

**25 நாட்களில் உற்பத்தி செய்யப்பட்ட மிதிவண்டிகள்** $= 1560 \times 25$

**39,000 மிதிவண்டிகள்**

**6. ஒரு நிறுவனம் புது ஆண்டிற்கான வெகுமதித் தொகையாக (போனஸ்) ₹ 62500ஐ 25 ஊழியர்களுக்குச் சமமாகப் பங்கிட்டு வழங்கியது. ஒவ்வொருவரும் பெற்ற தொகை எவ்வளவு?**

**விடை மொத்த தொகை = ₹. 62500**

**ஊழியர்களின் எண்ணிக்கை** = 25

**ஒவ்வொருவரும் பெற்ற தொகை**

= ₹. 62500 ÷ 25

= ₹. $\frac{62500}{25}$ ₹. 2500

**7. சுருக்குக.**

i) $(10 + 17) \div 3$

ii) $12 - [3 - \{6 - (5 - 1)\}]$

iii) $100 + 8 \div 2 + \{(3 \times 2) - 6 \div 2\}$

**விடை:**

i) $(10 + 17) \div 3$

$= 27 \div 3$

$= \frac{27}{3}$

$= 9$

ii) $12 - [3 - \{6 - (5 - 1)\}]$

$= 12 - [3 - \{6 - 4\}]$

$= 12 - [3 - 2]$

$= 12 - 1$

$= 11$

iii) $100 + 8 \div 2 + \{(3 \times 2) - 6 \div 2\}$

$= 100 + 8 \div 2 + \{6 - 3\}$

$= 100 + 8 \div 2 + 3$

$= 100 + 4 + 3$

$= 107$



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## புறவய வினாக்கள்

**8. $3 + 5 - 7 \times 1$ இன் மதிப்பு**
அ) 5 ஆ) 7 இ) 8 ஈ) 1 **விடை: ஈ) 1**

**9. $24 \div \{8 - (3 \times 2)\}$ இன் மதிப்பு**
அ) 0 ஆ) 12 இ) 3 ஈ) 4 **விடை: ஆ) 12**

**10. BIDMASஐப் பயன்படுத்திச், சரியான குறியீட்டைக் கட்டத்தில் நிரப்புக $2 \square 6 - 12 \div (4 + 2) = 10$**
அ) + ஆ) – இ) × ஈ) ÷ **விடை: இ) ×**

### நினைவில் கொள்க

- ➢ சரியான மதிப்புகள் தேவைப்படாத சூழலில் எண்களின் மதிப்பீடும், முழுமைப்படுத்தலும் தேவைப்படுகின்றன.
- ➢ கொடுக்கப்பட்ட எண்ணின் மதிப்பினை உவந்த துல்லியத்தோடு குறிப்பதை உத்தேச மதிப்பு என்கிறோம்.
- ➢ எண்ணை முழுமையாக்குவதால் அதன் மதிப்பினை எளிதாகவும் தேவைக்கேற்பவும் கணக்கிட முடியும்.

## பயிற்சி 1.4

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

i) 843 இன் அருகிலுள்ள 100 இன் மதிப்பு ______
**விடை: 800**

ii) 756 இன் அருகிலுள்ள 1000 இன் மதிப்பு ______
**விடை: 1000**

iii) 85654 இன் அருகிலுள்ள 10000 இன் மதிப்பு ____
**விடை: 90000**

**2. சரியா?, தவறா? எனக் கூறுக.**

i) 8567 ஆனது 8600 என அருகிலுள்ள 10 இக்கு முழுமைப்படுத்தப்பட்டுள்ளது. **விடை: தவறு**

ii) 139 ஆனது 100 என அருகிலுள்ள 100 இக்கு முழுமைப்படுத்தப்பட்டுள்ளது. **விடை: சரி**

iii) 1,70,51,972 ஆனது 1,70,00,000 என அருகிலுள்ள இலட்சத்திற்கு முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.
**விடை: தவறு**

= 1899600

**3. பின்வரும் எண்களைக் கொடுக்கப்பட்ட இட மதிப்பிற்கு முழுமைப்படுத்துக**

i) 4,065 ; நூறு ii) 44,555 ; ஆயிரம்
iii) 86,943 ; பத்தாயிரம் iv) 50,81,739 ; இலட்சம்
v) 33,75,98,482 ; பத்துக் கோடி

**விடை: i) 4100 ii) 45,000 iii) 90,000 iv) 51,00,000 v) 30,00,00,000**

**4. 157826 மற்றும் 32469 இன் கூட்டலைப் பத்தாயிரத்திற்கு முழுமையாக்கி உத்தேச மதிப்பு காண்க.**

**விடை:**

| | | |
|---|---|---|
| 157826 | ⇒ | 1,60,000 |
| + 32469 | ⇒ | 30,000 |
| 190295 | | 1,90,000 |

**பத்தாயிரத்திற்கு முழுமையாக்கும் போது கிடைக்கும் உத்தேச மதிப்பு = 1,90,000**

**5. ஒவ்வோர் எண்ணையும் அருகிலுள்ள நூறுகளுக்கு முழுமைப்படுத்துக.**
i) 8074 + 4178 ii) 1768977 + 130589

**விடை:**

i) 8074 + 4178
**உத்தேச மதிப்பு:** அருகிலுள்ள நூறுக்கு முழுமைப்படுத்த = 8100 + 4200 = 12,300
உத்தேச மதிப்பு ⇒ 8074 + 4178 = 12,300

ii) 1768977 + 130589 = 18,99,566
**உத்தேச மதிப்பு:** அருகிலுள்ள நூறுக்கு முழுமைப்படுத்த = 1769000 + 130600

உத்தேச மதிப்பு ⇒ 8074 + 4178 = 1899600

**6. ஒரு நகரத்தில் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை 43,43,645 ஆகவும் 2011ஆம் ஆண்டில் 46,81,087 ஆகவும் இருந்தது. அதிகரித்துள்ள மக்கள் தொகையின் உத்தேச மதிப்பை ஆயிரங்களில் முழுமையாக்குக.**

**விடை:** 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை
= 46,81,087 ⇒ 46,81,000

2001 ஆம் ஆண்டின் மக்கள் தொகை
= 43,43,645 ⇒ 43,44,000

அதிகரித்துள்ள மக்கள் தொகை = 3,37,000



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**அதிகரித்துள்ள மக்கள் தொகையின் உத்தேச மதிப்பை நூறுகளில் முழுமையாக்கும்போது கிடைப்பது = 3,37,000**

## புறவய வினாக்கள்

**7. ஓர் எண்ணை ஆயிரங்களில் முழுமையாக்கினால் கிடைப்பது 11000 எனில் அந்த எண்.**

i) 10345 ii) 10855

iii) 11799 iv) 10056

**விடை: ii) 10855**

**8. 76812 இன் அருகிலுள்ள நூறுகளின் உத்தேச மதிப்பு**

i) 77000 ii) 76000

iii) 76800 iv) 76900

**விடை: iii) 76800**

**9. 9785764 இன் அருகிலுள்ள இலட்சத்தின் உத்தேச மதிப்பு**

i) 9800000 ii) 9786000

iii) 9795600 iv) 9795000

**விடை: i) 9800000**

**10. 167826 மற்றும் 2765 ஆகியவற்றின் கழித்தலை அருகிலுள்ள ஆயிரங்களுக்கு முழுமையாக்கக் கிடைக்கும் உத்தேச மதிப்பு**

i) 180000 ii) 165000

iii) 140000 iv) 155000

**விடை: ii) 165000**

### நினைவில் கொள்க

- ➢ இயல் எண்களின் (N) தொகுப்போடு பூச்சியத்தைச் சேர்க்கும் போது முழு எண்கள் (W) கிடைக்கின்றன. W= { 0,1, 2, ....}
- ➢ முழு எண்களில் மிகச் சிறிய எண் 0 ஆகும்.
- ➢ 0 மற்றும் 1 முறையே முழு எண்களின் கூட்டல் சமனி மற்றும் பெருக்கல் சமனி ஆகும்.
- ➢ முழு எண்களை எவ்வரிசையிலும் கூட்டவும் அல்லது பெருக்கவும் முடியும். எனவே, இது பரிமாற்றுப் பண்புடையது.
- ➢ முழு எண்களின் பெருக்கலானது பரிமாற்று மற்றும் சேர்ப்புப் பண்புகளை உடையது.
- ➢ கூட்டலின் மீதான பெருக்கலின் பங்கீட்டுப் பண்பை முழு எண்கள் நிறைவு செய்யும்
- ➢ முழு எண்களைப் பூச்சியத்தால் வகுப்பது வரையறுக்கப்படவில்லை.

## பயிற்சி 1.5

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

i) மிகச் சிறிய இயல் எண்ணிற்கும் மிகச் சிறிய முழு எண்ணிற்கும் இடையே உள்ள வித்தியாசம் ____.

**விடை: 1**

ii) 17 × ____ = 34 x 17 **விடை: 34**

iii) ஓர் எண்ணுடன் _____ ஐக் கூட்டும் போது, அந்த எண் மாறாமல் இருக்கும். **விடை: பூஜ்ஜியம்**

iv) ______________ ஆல் வகுப்பது என்பது வரையறுக்கப்படவில்லை **விடை: 0**

v) ஓர் எண்ணை ________ ஆல் பெருக்கும்போது அந்த எண் மாறாமல் இருக்கும். **விடை: 1**

**2. சரியா, தவறா எனக் கூறுக.**

i) முழு எண்களின் பெருக்கல் சமனி பூச்சியம் ஆகும்.

**விடை: தவறு**

ii) இரு முழு எண்களின் கூடுதல் அதன் பெருக்குத் தொகையை விடக் குறைவானதாக இருக்கும்.

**விடை: தவறு**

iii) முழு எண்களில் கூட்டல் மற்றும் பெருக்கல் ஆகியவை சேர்ப்புப் பண்புடையவை. **விடை: சரி**

iv) முழு எண்களில் கூட்டல் மற்றும் பெருக்கல் ஆகியவை பரிமாற்றுப் பண்புடையவை.

**விடை: சரி**

v) முழு எண்களில் கூட்டலின் மீதான பெருக்கல் பங்கீட்டுப் பண்புடையது. **விடை: சரி**

**3. கீழ்க்காணும் வினாக்களில் பெறும் பண்பு யாது?**

i) 75 + 34 = 34 + 75

**விடை: கூட்டலின் பரிமாற்றுப் பண்பு**

ii) (12 × 4) × 8 = 12 × (4 × 8)

**விடை: பெருக்கலின் சேர்ப்புப் பண்பு**

iii) 50 + 0 = 50 **விடை: '0' கூட்டல் சமனி**

iv) 50 × 1 = 50 **விடை: '1' பெருக்கல் சமனி**

v) 50 × 42 = 50 × 40 + 50 × 2

**விடை: கூட்டல் மீதான பெருக்கலின் பங்கீடு**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**4. முழு எண்களின் பண்புகளைப் பயன்படுத்திச் சுருக்குக.**

i) $50 \times 102$ ii) $500 \times 689 - 500 \times 89$

iii) $4 \times 132 \times 25$ iv) $196 + 34 + 104$

**விடை:**

(i) $50 \times 102 = 50 \times (100 + 2)$

$= (50 \times 100) + (50 \times 2)$

$= 5000 + 100 = 5100$

(ii) $500 \times 689 - 500 \times 89$

$= 500 \times (689 - 89)$

$= 344500 - 44500$

$= 300000$

$500 \times (689 - 89) = 500 \times 600 = 3,00000$

iii) $(4 \times 132) \times 25 = 4 \times (132 \times 25$

$= (4 \times 132) \times 25$

$= 528 \times 25$

$= 13200$

$4 \times (135 \times 25)$

$= 4 \times 3300 = 13200$

iv) $(196 + 34) + 104 = 196 + (34 + 104)$

$(196 + 34) + 104 = 230 + 104 = 334$

$196 + (34 + 104) = 196 + 138 = 334$

## புறவய வினாக்கள்

**5. $(53 + 49) \times 0$ என்பது**

அ) 102 ஆ) 0 இ) 1 ஈ) $53 + 49 \times 0$

**விடை: ஆ) 0**

**6. $\frac{59}{1}$ என்பது**

அ) 1 ஆ) 0 இ) 1/59 ஈ) 59

**விடை: ஈ) 59**

**7. ஒரு பூச்சியமற்ற முழு எண் மற்றும் அதனுடைய தொடரியின் பெருக்குத் தொகை எப்போதும்**

அ) ஓர் இரட்டை எண் ஆ) ஓர் ஒற்றை எண்

இ) பூச்சியம் ஈ) இவற்றுள் ஏதுமில்லை

**விடை: அ) ஓர் இரட்டை எண்**

**8. முன்னி இல்லாத ஒரு முழு எண்**

அ) 10 ஆ) 0

இ) 1 ஈ) இவற்றுள் ஏதுமில்லை

**விடை: ஆ) 0**

**9. பின்வரும் கோவைகளில் எது பூச்சியமல்ல?**

அ) $2 \times 0$ ஆ) $0 + 0$

இ) $2 + 0$ ஈ) $0 - 0$

**விடை: இ) 2 + 0**

**10. பின்வருவனவற்றுள் எது உண்மை அல்ல?**

அ) $(4237 + 5498) + 3439 = 4237 + (5498 + 3439)$

ஆ) $(4237 \times 5498) \times 3439 = 4237 \times (5498 \times 3439)$

இ) $4237 + 5498 \times 3439 = (4237 + 5498) \times 3439$

ஈ) $4237 \times (5498 + 3439) = (4237 \times 5498) \times (4237 \times 3439)$

**விடை: இ) $4237 + 5498 \times 3439 = (4237 + 5498) \times 3439$**

## பயிற்சி 1.6

### பல்வகைத் திறனறிப் பயிற்சிக் கணக்குகள்

**1. என்னுடைய பூட்டப்பட்ட பெட்டியைத் திறக்கப் பயன்படும் கடவுச் சொல்லானது மிகப் பெரிய 5 இலக்க ஒற்றை எண் ஆகும். இது 7, 5, 4, 3 மற்றும் 8 ஆகிய இலக்கங்களைக் கொண்டது எனில் அக்கடவுச் சொல்லைக் கண்டறிக.**

**விடை: 87543**

**2. 2001இல் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நான்கு மாநிலங்களின் மக்கள் தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மக்கள் தொகையின் படி அம்மாநிலங்களை ஏறு மற்றும் இறங்கு வரிசையில் வரிசைப்படுத்துக.**

| மாநிலம் | மக்கள் தொகை |
|---|---|
| தமிழ்நாடு | 72147030 |
| இராஜஸ்தான் | 68548437 |
| மத்திய பிரதேசம் | 72626809 |
| மேற்கு வங்காளம் | 91276115 |

**விடை: ஏறு வரிசை**

**6,85,48,437 < 7,21,47,030 < 7,26,26,809 < 9,12,76,115**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**இறங்கு வரிசை**

9,12,76,115 > 7,26,26,809 > 7,21,47,030 > 6,85,48,437

**3. பின்வரும் அட்டவணையை உற்றுநோக்கி, கீழேயுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

| ஆண்டு | புலிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1990 | 3500 |
| 2008 | 1400 |
| 2011 | 1706 |
| 2014 | 2226 |

i) 2011 இல் இருந்த புலிகள் எத்தனை?

**விடை: 1706**

ii) 1990ஐ விட 2008 இல் எத்தனை புலிகள் குறைந்துள்ளன?

**விடை: 2100**

iii) 2011 மற்றும் 2014 இக்கும் இடையே உள்ள புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா?

**விடை: 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கு இடையே புலிகளின் எண்ணிக்கை** 520 **அதிகரித்துள்ளது.**

**4. முல்லைக் கொடி, ஒவ்வொரு பையிலும் 9 ஆப்பிள்கள் கொண்ட 25 பைகள் வைத் திருந்தாள். அவளுடைய 6 நண்பர்களுக்கு அவற்றைச் சமமாகப் பங்கிட்டுக்கொடுத்தாள் எனில், ஒவ்வொரு நண்பரும் எத்தனை ஆப்பிள்களைப் பெற்றிருப்பர்? ஆப்பிள்கள் மீதமிருக்க வாய்ப்புண்டா? உண்டெனில் எத்தனை?**

**விடை:** ஆப்பிள் பைகளின் எண்ணிக்கை = 25

ஒவ்வொரு பையிலும் உள்ள ஆப்பிள்களின் எண்ணிக்கை = 9

மொத்த ஆப்பிள்கள் $= 25 \times 9$

$= 225$

அவளுடைய 6 நண்பர்களுக்கு அவற்றைச் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தாள் எனில், ஒவ்வொரு நண்பருக்கும் கிடைக்கக் கூடிய ஆப்பிள்கள்

$= 225 \div 6 = 37$

மீதமிருக்கும் ஆப்பிள்கள் = 3

**5. ஒரு கோழிப் பண்ணையிலிருந்து 15472 முட்டைகளை, ஓர் அடுக்கு அட்டையில் 30 முட்டைகள் வீதம் அடுக்கினால், மொத்தம் எத்தனை அடுக்கு அட்டைகள் தேவைப்படும்?**

**விடை:**

மொத்த முட்டைகள் = 15472

ஒரு அடுக்கு அட்டையில் அடுக்கப்படும் முட்டைகள் = 30

தேவைப்படும் அடுக்கு அட்டைகள்

$= 15472 \div 30$

$= 515 + 1$ (மீதமுள்ள 22 முட்டைகளை அடுக்கி வைக்க)

```
        515
   30 | 15472
        150
        ---
         47
         30
        ---
         172
         150
        ---
          22
```

ஈவு = 515

மீதி = 22

## மேற்சிந்தனைக் கணக்குகள்

**6. அட்டவணையைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

| விண்மீன் பெயர் | விட்டம் (மைல்களில்) |
|---|---|
| சூரியன் | 864730 |
| சிரியஸ் | 1556500 |
| அகத்தியம் | 25941900 |
| ஆல் ஃபா சென்டாரி | 1037700 |
| சுவாதி விண்மீன் | 19888800 |
| வேகா | 2594200 |

i) அகத்தியம் விண்மீன் விட்டத்தை இந்திய மற்றும் பன்னாட்டு முறையில் எழுதுக.

ii) சிரியஸ் விண்மீன் விட்டத்தில் உள்ள 5 இன் மதிப்புகளின் கூடுதலை இந்திய முறையில் எழுதுக.

iii) எண்ணூற்று அறுபத்து நான்கு மில்லியன் எழுநூற்று முப்பது என்பதை இந்திய முறையில் எழுதுக.

iv) சுவாதி விண்மீன் விட்டத்தைப் பன்னாட்டு முறையில் எழுதுக.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



v) அகத்தியம் மற்றும் சுவாதி விண்மீன்களின் விட்டங்களின் வேறுபாட்டை இந்திய மற்றும் பன்னாட்டு முறையில் எழுதுக.

**விடை:**

i) இந்திய முறை: இரண்டு கோடி ஐம்பத்து ஒன்பது இலட்சத்து நாற்பத்து ஓராயிரத்து தொள்ளாயிரம்.
பன்னாட்டு முறை: இருபத்து ஐந்து மில்லியன் தொள்ளாயிரத்து நாற்பத்து ஓராயிரத்து தொள்ளாயிரம்

ii) 5,50,000

iii) 864,000,730 (86,40,00,730)

iii) எண்பத்து ஆறு கோடி நாற்பது இலட்சத்து எழுநூற்று முப்பது.

iv) பத்தொன்பது மில்லியன் எண்ணூற்று எண்பத்து எட்டு ஆயிரத்து எண்ணூறு (19,888,800)

v) இந்திய முறை: 60,53,100 - அறுபது இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து நூறு
பன்னாட்டு முறை: 6,053,100 - ஆறு மில்லியன் ஐம்பத்து மூன்று ஆயிரத்து நூறு.

---

**7. அன்பு, அறிவுச்செல்வியிடம் ஓர் ஐந்து இலக்க ஒற்றைப்படை எண்ணை நினைவில் கொள்ளுமாறு கூறினான். மேலும் பின்வரும் குறிப்புகளைக் கூறுகிறான்.**

1000 ஆவது இட மதிப்பில் உள்ள இலக்கம் 5ஐ விடக் குறைவு.

100 ஆவது இட மதிப்பில் உள்ள இலக்கம் 6ஐ விடக் குறைவு.

10 ஆவது இட மதிப்பில் உள்ள இலக்கம் 8.

அறிவுச்செல்வி கூறிய விடை என்னவாக இருக்கும்? அவள் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளைக் கூறுவாளா?

**விடை:** 63785
53781

---

**8. ஓர் அரங்கில் இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெற உள்ளது. மொத்தமுள்ள 7689 நாற்காலிகளை வரிசைக்கு 90 நாற்காலிகள் வீதம் போடப்படுகிறது எனில், (i) எத்தனை வரிசைகளில் இருக்கும் (ii) எத்தனை நாற்காலிகள் மீதம் இருக்கும்?**

**விடை:**

i) மொத்த நாற்காலிகள் = 7689
ஒரு வரிசையிலுள்ள நாற்காலிகளின் எண்ணிக்கை = 90
மொத்த வரிசைகளின் எண்ணிக்கை = 7689 ÷ 90 = 85
$\therefore$ 85 வரிசைகளில் நாற்காலிகளை போடலாம்.

ii) 39 நாற்காலிகள் மீதம் இருக்கும்.

```
      85
90 | 7689
     720
     ----
      489
      450
     ----
       39
```

---

**9. ஏழு இலக்க எண் 29,75,842 ஐ இலட்சம் மற்றும் பத்து இலட்சத்துக்கு முழுமையாக்குக. அம்மதிப்புகள் சமமாக இருக்குமா?**

**விடை:**

ஆம், இரண்டும் சமமானது (30,00,000)

---

**10. செய்தித்தாள் மற்றும் இதழ்களிலிருந்து 5 அல்லது 6 அல்லது 7 இலக்க எண்களைக் கண்டுபிடித்துப் பத்தாயிரத்துக்கு முழுமையாக்குக.**

**விடை:**

(i) $14276 \simeq 10000$ (ii) $1,86945 \simeq 1,90000$

***** ***** *****

***



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB

# இயல் 2 இயற்கணிதம்–ஓர் அறிமுகம்

**நினைவில் கொள்க**

➢ மாறி என்பது வெவ்வேறு எண் மதிப்புகளை ஏற்கும் அளவீடாகும்.
இதை a, b, c, ..., x, y, z. என்ற சிறிய ஆங்கில எழுத்துகளால் குறிக்கலாம்.

➢ நடைமுறைச் சூழல்களில் உள்ள தொடர்புகளை வெளிப்படுத்த மாறிகளைப் பயன்படுத்துகிறோம்.

➢ எண்ணியல் மற்றும் வடிவியலில் உள்ள பல்வேறு விதிகளைப் பொதுமைப்படுத்தி வெளிப்படுத்த மாறிகளைப் பயன்படுத்தலாம்.

## பயிற்சி 2.1

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

i) a,b,c…x,y,z ஆகிய எழுத்துகள் ________ குறிப்பதற்குப் பயன்படுகின்றன. **விடை: மாறிகள்**

ii) 'f' இலிருந்து 5 ஐக் குறைத்தல் என்பதற்கான இயற்கணிதக் கூற்று ________. **விடை: f-5**

iii) 's' ஐ 5 ஆல் வகுத்தல் என்பதற்கான இயற்கணிதக் கூற்று ________. **விடை:** $\frac{s}{5}$

iv) ‘தற்போது ‘A’’ இன் வயது 'n' எனில் 7 ஆண்டுகளுக்கு முன்பு 'A' இன் வயது ________. **விடை: n-7**

v) 'p - 5' ஆனது 12 எனில் 'p' இன் மதிப்பு ________. **விடை: 17**

**2. சரியா, தவறா எனக் கூறுக.**

i) 

எழுதுகோலின் 'B' பகுதியின் நீளம் 'a-6'. **விடை: தவறு**

ii)  இன் விலை 'x' மற்றும்  இன் விலை ₹ 5 எனில் இவ்விரு பழங்களின் மொத்த விலை '₹ x + 5' ஆகும். **விடை: சரி**

iii) 'c' இன் மூன்று மடங்கை விட 10 அதிகம் எனும் கூற்று '10c + 3' ஐக் குறிக்கிறது. **விடை: தவறு**

iv) 10 அரிசிப் பைகளின் விலை ₹ 't' எனில் 1 அரிசிப் பையின் விலை ₹ '$\frac{t}{10}$' ஆகும். **விடை: சரி**

v) 'q' மற்றும் 20 இன் பெருக்கற்பலன் 20q. **விடை: சரி**

**3. அடுத்த இரண்டு அமைப்புகளை வரையவும் மற்றும் அட்டவணையை நிரப்பவும்.**



| வடிவங்கள் | முதலாம் அமைப்பு | இரண்டாம் அமைப்பு | மூன்றாம் அமைப்பு | நான்காம் அமைப்பு | ஐந்தாம் அமைப்பு |
|---|---|---|---|---|---|
| சதுரங்கள் | 1 | 2 | 3 | | |
| வட்டங்கள் | 1 | 2 | 3 | | |
| முக்கோணங்கள் | 2 | 4 | 6 | | |



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**விடை:**

| வடிவங்கள் | முதலாம் அமைப்பு | இரண்டாம் அமைப்பு | மூன்றாம் அமைப்பு | நான்காம் அமைப்பு | ஐந்தாம் அமைப்பு |
|---|---|---|---|---|---|
| சதுரங்கள் | 1 | 2 | 3 | 4 | 5 |
| வட்டங்கள் | 1 | 2 | 3 | 4 | 5 |
| முக்கோணங்கள் | 2 | 4 | 6 | 8 | 10 |



**4. அறிவழகன் அவரது தந்தையை விட 30 வயது இளையவன். அறிவழகனின் வயதை அவரது தந்தையின் வயதைக் கொண்டு எழுதவும்.**

**விடை:** அறிவழகன் தந்தையின் வயதை x ஆண்டுகள் என்க.

கணக்கின் படி, அறிவழகனின் வயது (x - 30) ஆண்டுகள்

**5. 'u' என்பது இரட்டை எண் எனில் பின்வருவனவற்றை எவ்வாறு குறிப்பிடுவாய்?**

i) 'u' இன் அடுத்த இரட்டை எண் எது?

ii) 'u' இன் முந்தைய இரட்டை எண் எது?

**விடை:** i) u + 2 ii) u - 2

**6. பின்வரும் வாய்மொழிக் கூற்றுகளை இயற் கணிதக் கூற்றுகளாக மாற்றுக.**

i) 't' உடன் 100 ஐக் அதிகரிக்க. **விடை: t + 100**

ii) 'q' இன் 4 மடங்கு. **விடை:** 4q

iii) 'y' இன் 9 மடங்கிலிருந்து 4 ஐக் குறைக்க. **விடை:** 9y - 4

**7. பின்வரும் இயற்கணிதக் கூற்றுகளை வாய்மொழிக் கூற்றுகளாக மாற்றுக.**

i) x ÷ 3 **விடை:** x ஐ 3 ஆல் வகுக்க

ii) 11 + 10 x **விடை:** x இன் 10 மடங்குடன் 11ஐக் கூட்டுக

iii) 70s **விடை:** 70 மற்றும் s இன் பெருக்கல்

**8. ஆசிரியர் இரண்டு மாணவர்களிடம் "ஓர் எண்ணை விட 8 அதிகம்" என்ற வாய் மொழிக் கூற்றை இயற்கணிதக் கூற்றாக எழுதுமாறு கூறுகிறார். வெற்றி '8 + x' எனவும், மாறன் '8x' எனவும் எழுதினர். யாருடைய விடை சரியானது?**

**விடை:** வெற்றியின் விடை சரியானது

**9. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

i) 'g' ஆனது '300' எனில், 'g - 1' மற்றும் 'g + 1' இன் மதிப்பு யாது?

ii) '2s - 6' ஆனது 30 எனில், 's' இன் மதிப்பு யாது?

**விடை:** i) g = 300

